2022 ஏப்ரல் 8]

மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

80—

கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம்

***11995—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் தொகுதி, அய்யம்பாளையம் 8–வது வார்டு பகுதியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதி, அய்யம்பாளையத்தில் கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 1, அய்யம்பாளையத்தில் சுமார் 20 ஆண்டுகளாக கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. சாலை விரிவாக்கத்தின்போது அந்தக் கட்டடம் இடிக்கப்பட்டதால் தற்போது 3 கிலோ மீட்டர் தொலைவிலே நல்லிபாளையம் என்ற பகுதியிலே அந்த மருந்தகம் இயங்கி வருவதால், நான்கு வழிச் சாலையைக் கடந்து கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த ஆண்டே அய்யம்பாளையத்தில் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2006 முதல் 2011 வரை முதல்வராக இருந்த காலத்தில் முதன்முதலில் கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டத்தைத் துவக்கிவைத்தார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: அதே வழியில் இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கால்நடை பராமரிப்புத் துறையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்ட உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையிலே, நாமக்கல் தொகுதி, அய்யம்பாளையத்தில் கால்நடை மருந்தகம் வாடகையில்லா தனியார் கட்டடத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மருந்தகத்தில் நாளொன்றுக்கு சுமார் 50 முதல் 60 கால்நடைகளுக்கு பல்வேறு மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அதிகளவில் கால்நடைகள் சிகிச்சைக்கு வருவதால் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும்விதமாக, இம்மருந்தகத்திற்கு ரூ.47.85 இலட்சம் செலவில் 22 சென்ட் நிலத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாணை எண் G.O. (2D) எண் 120, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை (கா.ப.III), நாள் 2–3–2022–ன்மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதித்துள்ளார்கள் என்பதையும், இதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

2022 ஏப்ரல் 8]

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய மக்கள் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மோகனூர் தாலுகாவில் 1970 ஆம் ஆண்டு முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. மோகனூர், தாலுகாவின் தலைமையிடமாகச் செயல்பட்டு வருகிறது. அதனைச் சுற்றி 25 கிராம ஊராட்சிகள் உள்ளன. அதே பகுதியில்தான் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையும் செயல்பட்டு வருகிறது. அந்தப் பகுதி காவிரிக் கரை ஓரத்தில் அமைந்துள்ள காரணத்தால், அங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும், கால்நடை வளர்ப்பும் உள்ளது. எனவே, அங்கே 50 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் 74 கால்நடை மருந்தகங்களை தலா ரூ.47.85 இலட்சம் செலவிலும், 3 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளை தலா ரூ.115 இலட்சம் செலவிலும், 4 கால்நடை பன்முக மருத்துவமனைகளை தலா ரூ.300 இலட்சம் செலவிலும் மற்றும் 7 கால்நடை மருத்துவமனைகளை ரூ.77 இலட்சம் செலவிலும், ஆக மொத்தம் 88 கால்நடை நிலையங்களுக்கு ரூ.57 கோடியே 46 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதில், நாமக்கல் மாவட்டத்திலுள்ள அய்யம்பாளையம் மற்றும் பீளமேடு பகுதிகளில் உள்ள கால்நடை மருந்தகங்களும் அடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் தேவைப்படும் இடங்கள் குறித்து இன்றைக்கு

[2022 ஏப்ரல் 8

தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய கால்நடை நிலையங்களை ஆய்வு செய்து, பழுதடைந்த கால்நடை நிலையங்களுக்கு புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஆய்வு செய்வதற்காக எங்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையில், வரவிருக்கின்ற காலத்தில், அந்தக் கால்நடை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

உயரழுத்த மின்கம்பிகள்

***1644—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, வடக்குபட்டு கிராமத்தில் வீடுகளுக்கு மேலே செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, வடக்குபட்டு கிராமத்தில் வீடுகளுக்கு மேலே செல்லும் உயரழுத்த மின்கம்பிகளை மாற்றியமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்று மாலைக்குள் அந்தப் பணிகள் நிறைவுபெறும் என்பதை மாண்புமிகு